DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 206/2014 PW : 1

Name : நீலகண்டன் Age –

S/o : செங்கல்வராயன் Village

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

---

Date: 03.09.2025.

**<u>5 முதல் 12, 24 முதல் 26 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1) மேற்சொன்ன பிரதிவாதிகள் தான் தாவா சொத்தில் வீடு கட்டி வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. யோகநாதன் மட்டும் தான் அங்கே வாழ்ந்து வருகிறார். யோகநாதன் 30, 40 ஆண்டுகளாக அங்கே குடியிருந்து வருகிறார் என்று சொன்னால் நாங்கள் வழக்கு தாக்கல் செய்த பின்பு தான் அவர் குடியிருந்து வருகிறார். தாவா தாக்கல் செய்தவற்கு முன்பு நாங்கள் காவல் கண்காணிப்பாள்ர அலுவலகத்தில் நாங்கள் ஒரு புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். எங்கள் சொத்தை அபகரித்து விட்டார்கள் அதை மீட்டு தர புகார் கொடுத்தோம். யோகநாதன், ரூக்கு, சுப்பிரமணி ஆகியோர்கள் மீது புகார் கொடுத்தோம். நாங்கள் புகார் கொடுப்பதற்கு முன்பே அவர்கள் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். அவர்கள் 20, 30 ஆண்டுகள் முன்பே வீடு கட்டியிருந்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் வீடு கட்டும்போது நாங்கள் ஆட்சேபணை செய்தோம். வழக்கு தாக்கல் செய்த போது தான் அவர்கள் வீடு கட்டினார்கள்.

2) தாவா சொத்தின் விஸ்தீரணம் 28 சென்ட் ஆகும். 28 சென்ட் சம்மந்தமாக என்னுடைய சித்தப்பா வீரராகவன் பல நபர்களுக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்று சொன்னால் அவர் வெங்கடேசனுக்கு மட்டும் தான் கிரையம் கொடுத்துள்ளார். எனக்கு சுமார் 15 வயது இருக்கும் போது எனது

சித்தப்பா எங்களுக்கு தெரியாமல் அந்த சொத்தை வெங்கடேசனுக்கு கிரையம் கொடுத்துள்ளா்ர. இந்த விபரம் வெங்கடேசன் வீடு கட்ட வரும் போது எனக்கு தெரியவந்தது. அவர் கிரையம் கொடுத்து 2, 3 ஆண்டு கழித்து இந்த விபரம் தெரியவந்தது. இது சம்பந்தமாக எனது சித்தப்பாவிடம் கேட்டபோது அதில் தனக்கு பாகம் உள்ளதாகவும், தனக்கு 5 சென்ட் விற்க உரிமையுள்ளதாகவும், தன்னிடம் சொன்னா்ர. அது சம்மந்தமாக நான் எந்த வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

3) கோவிந்தம்மாள் யா்ர என்று தெரியும். அவர் எங்கள் ஊரை சேர்ந்தவர் தான். என் வீட்டிற்கு நான்கு வீடு தள்ளி தான் குடியிருக்கிறா்ர. என்னுடைய வீடு 28 சென்ட் நிலத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். கோவிந்தம்மாள் வீடு கட்டியுள்ளா்ர என்றால் அவர் அங்கு கட்டவில்லை. அவர் நத்தம் புறம்போக்கில் தான் அவர் வீடு கட்டியுள்ளா்ர. வாங்கிய 5 சென்ட் தான் காலியாக இருந்தது. முத்துகிருஷ்ணன் 28 சென்ட் நிலத்தில் கிரையம் வாங்கியுள்ளரா என்ற விபரம் தெரியாது. முத்துகிருஷ்ணன் கிரையம் வாங்கிய 3 சென்ட் நிலத்தில் அவர் பெயரில் பட்டா உள்ளது என்றால் அதை பற்றி தெரியாது. கிருஷ்ணப்ப நாயகர் 3 சென்டில் அனுபவித்து வந்தார் என்றால் எங்கள் நிலத்தில் பக்கத்தில் கோவில் மனை உள்ளதால் அதில் தான் வீடு கட்டி வந்தா்ரகள். பக்கத்தில் உள்ள 28 சென்ட் நிலம் காலியாக இருந்ததால் அதையும் அவர்கள் அனுபவித்து வந்தா்ரகள். அவ்வாறு அவர்கள் சுமா்ர 50 ஆண்டுகள் அனுபவித்து வருகிறா்ரகள் என்று சொன்னால் சரிதான். கணேசன் என்பவரும் எப்போது வாங்கினா்ர என்ற விபரம் தெரியாது. அவரும் கோவில் மனையில் தான் இருந்தா்ர. கோவில் மனை வாங்யி பின்பு பக்கத்தில் காலியாக இருந்த 28 சென்ட்டை அவரும் அனுபவித்து வந்தா்ர. அவ்வாறு சுமா்ர 5, 6 குடும்பங்கள் அந்த இடத்தில் காலி மனையை அனுபவித்து வந்தா்ரகள். இது சம்மந்தமாக நான் எந்த வித ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சரிதான். 28 செட்டில் நிலத்தில் சுமா்ர 25 வீடுகள் உள்ளது என்றால் சரியல்ல. எங்கள் மனை காலியாக தான் உள்ளது.

4) ராஜவேலு முதலியா்ர, எங்கள் 28 சென்ட் நிலத்தில் செஞ்சி நாயக்கரிடம் கிரையம் வாங்கி அனுபவித்து வந்தா்ர. என்னை குறுக்கு விசாரணை செய்த பின்பு தான் நான் இதர தரப்பினர்கள் இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 28 சென்ட் நிலத்தில் இன்னும் பல பேர் பாகஸ்த்ரகள் உள்ளா்ரகள் என்றாலும் அவர்களை இந்த வழக்கில் தரப்பினர்களகாக சேர்க்காததால் இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. 5 முதல் 12 பிரதிவாதிகள் எனக்கு தெரிந்தே தாவா சொத்தில் குடியிருந்து வருவதால் அந்த நிலம் அவர்களுக்கு சொந்தமானது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடிசெய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2025.09.03 14:09:30 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.